புரட்சிப்
பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஜனவரி 11, 2018 | புரட்சி 16 | முழக்கம் 52 | விலை: ரூ.3.00

## பெரியாரின் ‘குடிஅரசு’ தொகுதிகளை வெளியிட்டதற்காக கழகத்திடம்

# ரூ.15 இலட்சம் இழப்பீடுக் கோரி மீண்டும் கி.வீரமணி வழக்கு

பெரியாரின் ‘குடிஅரசு’ தொகுப்புகளை வெளியிட்டதற்காக பதிப்புரிமை சட்டப்படி தனக்கு ரூ.15 இலட்சம் இழப்பீடு தரவேண்டும் என்று பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் செயலாளர் கி. வீரமணி மீண்டும் உயர்நீதிமன்றம் வந்துள்ளார்.

பெரியாரின் ‘குடிஅரசு’ வார இதழில் இடம் பெற்றிருந்த பெரியாரின் பேச்சு எழுத்துக்கள் நீண்டகாலமாக பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் வெளியிடாத நிலையில் பெரியார் திராவிடர் கழகம், காலவரிசைப்படி தொகுத்து 27 தொகுதிகளாக வெளியிட்டது. பெரியாரின் ‘குடிஅரசு’ தொகுப்புகளை வெளியிடும் உரிமை தங்கள் நிறுவனத்துக்கு மட்டுமே உண்டு என்றும், பெரியார் திராவிடர் கழகம் வெளியிட உரிமை இல்லை என்றும், கி.வீரமணி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். ‘குடிஅரசு’ பதிப்பாசிரியரும், அன்றைய பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவருமான கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மீது வழக்கு தொடரப்பட்டது. 2009ஆம் ஆண்டு வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.சந்துரு, பெரியார் தி.க. வெளியிட்ட ‘குடிஅரசு’ தொகுதிகளுக்கு 2008ஆம் ஆண்டு விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையை ரத்து செய்து தீர்ப்பளித்தார். காப்பீட்டு உரிமை சட்டத்தின் கீழ் உரிமை கோர முடியாது என்றும் தீர்ப்பளித்தார்.

மீண்டும் பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் செயலாளர் கி.வீரமணி, உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் நீதிபதி கலிபுல்லா தலைமையிலான இரண்டு நீதிபதி களடங்கிய அமர்வு, நீதிபதி எஸ். சந்துரு வழங்கிய தீர்ப்பை உறுதி செய்தது. மீண்டும் கி.வீரமணி வழக்கை உச்சநீதிமன்றம் கொண்டு சென்றார். உச்சநீதிமன்றம் 2010ஆம் ஆண்டு நவம்பரில் வழக்கை விசாரணைக்கு ஏற்காமலேயே தள்ளுபடி செய்தது.

இடைக்கால தடைவிதிக்க வேண்டும் என்ற கோரிக்கை, மூன்று நிலைகளிலும் தள்ளுபடியான நிலையில் பிரதான வழக்கு நிலுவையில் இருந்தது. இந்த நிலையில் பிரதான வழக்கில் கி.வீரமணி அவர்கள், வழக்கில் முன் வைத்த வேண்டுகோளை (Prayer) மாற்ற விரும்புவதாகவும் - புதிய வேண்டுகோள்களின் அடிப்படையில் வழக்கைத் தொடர உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். இந்த மனுவையும் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இப்போது பிரதான வழக்கில் கி.வீரமணி கேட்டிருந்த பெரியாரின் ‘குடிஅரசு’ தொகுதிகளை வெளியிட்டதற்காக ரூ.15 இலட்சம் இழப்பீடு தரவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மீண்டும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந் திருக்கிறார்.

இதன்படி மனுதாரர் வீரமணி, உயர்நீதி மன்றத்தில் ‘குடிஅரசு’ தொகுதிகளை வெளியிடும் உரிமை தங்களுக்கு மட்டுமே உண்டு என்பதற்கான சான்றுகளை சாட்சியாக நேரில் வந்து கூற வேண்டும். இதற்கு பதிப்பாசிரியர் கொளத்தூர் மணியும், த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை இராமகிருஷ்ணனும் தங்களுக்கு வெளியீட்டு உரிமை உண்டு என்றும், ரூ.15 இலட்சம் இழப்பீடு கேட்க முடியாது என்றும் அதற்கான சான்று களோடு சாட்சியமளிக்க வேண்டும். இந்த வழக்கு கடந்த ஜனவரி 4ஆம் தேதி உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்து, வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

பெரியார் திராவிடர் கழகம் ‘குடிஅரசு’ தொகுதிகளை வெளியிடுவதற்கான தடை இல்லை என்ற நீதிமன்ற ஆணையைப் பெற்ற பிறகு ஏராளமான பதிப்பகங்கள் பெரியாரின் ‘குடிஅரசு’ பதிப்புகளை வெளியிட்டு இலட்சக்கணக்கில் மக்களிடம் சேர்த்துள்ளன. ‘குடிஅரசில்’ இடம் பெற்றுள்ள பெரியார் கருத்துக் களின் அடிப்படையில் ஏராளமான ஆய்வுகளும் கட்டுரைகளும் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

இந்த நிலையில் ரூ.15 இலட்சம் இழப்பீடுகேட்டு நீதிமன்றம் வந்திருக்கிறார் ஆசிரியர் வீரமணி.

## கழக ஏட்டுக்கு 500 சந்தாக்கள்

# வழிகாட்டுகிறது சேலம் (மேற்கு) மாவட்டம்

சேலம் தலைமைச் செயலவையில் சேலம் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் ஜி.பி. கோவிந்தராஜ், கொளத்தூர் சூரி உறுதி கூறியவாறு, சேலம் மேற்கு மாவட்டக் கழகம், ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு 500 சந்தாக்களை உடனடியாக சேர்த்து அதற்கான கட்டணத்தையும் அனுப்பி வைத்துள்ளது. ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு எப்போதுமே கூடுதல் சந்தாக்களை சேகரித்து, ஏட்டின் உயிர்ப்புச் சக்தியாகத் திகழும் மேட்டூர் பகுதி மீண்டும் தனது கடமையை சிறப்பாக செய்து முடித்துள்ளது. இது முதற் கட்டம். தொடர்ந்து சந்தா சேர்ப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து வருகின்றன என்று கழகப் பொறுப்பாளர் ஜி.பி.கோவிந்தராஜ் கூறியுள்ளார். மேட்டூர் கிழக்கு மாவட்டக் கழகத்தின் இந்த செயல்பாட்டை ஏனைய மாவட்டக் கழகங்களும் செயல்படுத்துமா?

## மக்கள் மன்றத் தோழர்கள் கைதைக் கண்டித்து கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்



காஞ்சிபுரம் புதிய இரயில் நிலையத்தில் வைக்கப்பட்ட சட்ட மேதை புரட்சியாளர் அம்பேத்கர் உருவப் படத்தை நீக்கியதைக் கண்டித்து, ஒரு குறிப் பிட்ட மத அடை யாளத்தை மட்டும் முன்னிறுத்தி வரைந்த படங்களை அகற்றிய காஞ்சி மக்கள் மன்ற தோழர்களை கைது செய்த காவல்துறையைக் கண்டித்தும், வழக்குகளை திரும்பப் பெறக் கோரியும் திராவிடர் விடுதலைக்கழக காஞ்சி மாவட்டம் சார்பாக 4.1.18 அன்று பெரியார் தூண் காஞ்சிபுரம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது

காஞ்சி மாவட்ட பொறுப்பாளர் இரவிபாரதி தலைமையில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர். சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், வேலூர் மாவட்டம் பா சிவா மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் சிறை சென்று மீண்ட காஞ்சி மக்கள் மன்ற தோழர்கள் நால்வருக்கும் கறுப்பாடை அணிவித்து மரியாதை செய்தனர்.

# புதிய தொழிற்சாலைகள் இல்லை; வேலை வாய்ப்பின்மை தமிழகத்தில் அதிகரித்துள்ளது

மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள அறிக்கை இந்தியாவில் வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் வேலை வாய்ப்புகள் இல்லாத மாநிலத்தில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக கூறுகிறது. 15 வயதிலும் அதற்கு மேற்பட்ட வயதிலும் பல மாதங்களாக வேலை வாய்ப்புகள் கிடைக்காத இளைஞர்கள் குறித்த விவரங்கள் திரட்டப்பட்டன. அதன்படி தமிழ்நாட்டில் வேலை கிடைக்காதவர்கள் எண்ணிக்கை (3.8 சதவீதம்). தேசிய சராசரியைவிட (3.7) அதிகரித்திருக்கிறது. கருநாடகத்தில் இந்த அடிப்படையில் எடுத்த கணக்கீட்டின்படி வேலை கிடைக்காதவர்கள் 1.4 சதவீதம். தெலுங்கானாவில் (2.7 சதவீதம்), ஆந்திராவில் (3.5 சதவீதம்), குஜராத்தில் (0.6 சதவீதம்), மகாராஷ்டிராவில் 1.5 சதவீதம்.

சென்னை வளர்ச்சி ஆய்வு மய்யத்தின் (எம்.அய்.டி.எஸ்.) பொருளாதார பேராசிரியர் எம். விஜயபாஸ்கர் இது குறித்து, "தமிழ்நாடு போன்ற தொழில் வளர்ச்சியடைந்த மாநிலங்களில் வேலை வாய்ப்பில்லாத இளைஞர்கள் படித்தவர்கள்.


Unemployment on the rise, experts blame low industrial growth in TN

Sivakumar.B@timesgroup.com

Chennai: The number of unemployed people in Tamil Nadu has increased by 0.5% between 2013-14 and 2015-16. Data released by the Union



Financial analysts blame it on the low industrial growth in the state. "If more educated people are unemployed, it shows not many industries or companies are ready to take them. In the past few years not

அவர்கள் கல்விக்கு ஏற்ற வேலைகள் கிடைக்க வில்லை. தங்கள் கல்விக்கு ஏற்ற வேலை கிடைக்காமல் திண்டாடுகிறார்கள்" என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஏட்டுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்படாமல் தமிழகம் பின்தங்கி நிற்கிறது. இதுவும் வேலை இல்லாத் திண்டாட்டத்துக்கு ஒரு முக்கிய காரணம் என்று - பொருளாதார ஆய்வாளர் ஒருவர் கூறுகிறார். "படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கவில்லை என்றாலே, தொழிற்சாலைகள், கம்பெனிகள் வரவில்லை என்பதே காரணம். கடந்த சில ஆண்டுகளாகவே தமிழ்நாட்டில் தொழில் தொடங்க எவரும் முன் வரவில்லை" என்றார் அந்த நிபுணர்.

வேலை வாய்ப்புப் பதிவகங்கள் தரும் புள்ளி விவரங்களின்படி 2017 மார்ச்சு 30 வரை வேலை வாய்ப்புக்காகப் பதிவு செய்தோர் 81.30 இலட்சம் பேர். 2016 மார்ச் 30 நிலவரப்படி, இந்த எண்ணிக்கை 2.03 இலட்சம் குறைவு என்றாலும் 2016-2017 ஆம் ஆண்டில் வேலை வாய்ப்புக்காகப் பதிவு செய்த பட்டதாரிகள், உயர் பட்டதாரிகள், பொறியாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2.45 இலட்சம் பொறியியல் பட்டதாரிகள், அரசு வேலைகளுக்காகப் பதிவு செய்து, காத்திருக் கிறார்கள். அதேபோல் 4307 டாக்டர்களும் வேலைக்காகக் காத்திருக்கிறார்கள். 2015-16இல் 5510 டாக்டர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தனர். 2016-2017இல் இது 4307 என்ற அளவில் மட்டுமே குறைந்திருக்கிறது. 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு (டிச.25) இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

# பெரியாரைப் படி; அதுவே விடுதலைக்கு முதல் அடி

*ஈரோட்டில் டிசம்பர் 16 அன்று நடைபெற்ற பெண்கள் சுயமரியாதை மாநாட்டில் மணிமேகலை நிகழ்த்திய தலைமையுரை:*



விடுதலைக் காற்றை சுவாசிக்க வைத்த எம் தந்தையும், இவ்வுலகில் தோன்றிய அத்துணைப் புரட்சிக்காரர் களையும் விட, பெண்ணுரிமைக்கும் அவர்தம் விடுதலைக்கும் பெரியதாய் சிந்தித்த... குரல் கொடுத்த... போரிட்டக் கலகக்காரரான எங்கள் அய்யாவை பெரியாரை நன்றியோடு கைகூப்பி வணங்குகிறேன்.

இப்பெண்கள் சுயமரியாதை மாநாட்டின் நோக்கத்தையும் தற்காலப் பெண்களின் நிலையையும் அவர்கள் எவ்வாறு ஒடுக்கப்படுகிறார்கள், அவர்கள் எவ்வாறு உரிமைகள் மறுக்கப்பட்ட ஓர் அவல நிலையில் வாழ்கிறார்கள் என்பதை இங்கு வந்திருக்கிற ஆளுமைகள், விசாலமாக வும், விசாரணையுடனும், பெரும் தரவு களோடும் எடுத்துரைக்க இருப்பதால், நான் சிறியத் தகவல் ஒன்றோடு என் தலைமை உரையை முடித்துக் கொள்ள நினைக்கிறேன்.

நாங்கள் களப்பணிக்கு சென்ற போதெல்லாம் மக்களின் எண்ணங்கள், குறிப்பாக பெண்களின் மத்தியில் பெரியார் பற்றிய உருவகம் இப்படியாகத்தான் இருக்கிறது என்பதை உணர்ந்தோம்.

பெரியார் என்பவர் கடவுளை
மறுப்பவர்!
பெரியார் என்பவர் கடவுள்
சிலைகளை உடைப்பவர்!
பெரியார் நமக்கு சொல்லித்தந்த
யாவற்றையும்
மறுப்பவர், என்ற எதிர்மறையான
புரிதலோடுதான்
இருக்கிறார்கள்.

அந்தப் பெண்களுக்கு நான்
சொல்லிக் கொள்வது
இதுதான்!

மதிப்பிற்குரியப் பெண்களே!

நாத்திகத்திற்காக மட்டுமே
இங்கர்சால் எனும் புரட்சியாளர்
தோன்றினார்!

வர்க்க, பொருளாதார
அடிப்படையில்தான்
பெண்ணியத்தை
அணுகினார் தோழர் காரல்
மார்க்ஸ்.

தொழிலார் நலன்
கல்வியின் நோக்கம்
பாலின சமத்துவம்
பொருளாதாரப் புரட்சி
சாதியொழிப்பு... மத மறுப்பு

என ஒவ்வொரு புரட்சியாளர்,
ஒவ்வொரு புரட்சிக்காய்
போராடியபோது,
இவையனைத்திற்கும்
வெகுண்டெழுந்து களத்தில் நின்று
போரிட்டு வென்ற ஒரே புரட்சியாளர்
இவ்வுலகத்தில் என் தந்தை பெரியார்
ஒருவர் மட்டுமே!

என் இனிய பெண்ணினமே!

நீ விலக்காகி வலியில்
துடிக்கையில்...
தீட்டென்றுவெளியேத் தள்ளி...
தனித்தட்டு... தனிக்குவளை... தனிப்
பாய் என்று
வீட்டுத் தீண்டாமையில்
உன்னை வெளியே
விரட்டினார்களே!

விலங்கு போல் பாவித்து
நடத்தினார்களே!

அப்படியான உன்னை விரல்
பிடித்து
வீட்டுக்குள் சேர்த்தது...

உன் சகோதரனல்ல!
உன் தந்தையுமல்ல!

உன் சகோதரியும் அல்ல!
ஏன்! உன் தாய்கூட அல்ல!

யாரைப் புரிதலில்லாமல்
வெறுக்கிறாயோ...
யாரைப் பகுத்தறிவற்று ஒதுக்கி
வைத்திருக்கிறாயோ....

அந்த ஈரோட்டுக் கிழவன்தான்
உன்னை வீடு சேர்த்தது.
அந்தக் கிழவன்தான் உன்னை
மனிதி ஆக்கியவன் ;

அந்தக் கிழவன்தான்
சுயமரியாதையோடு
உன்னை இருக்கச் சொன்னவன்.

அந்தக் கிழவன்தான்
இராணுவத்திலும்,
விமான ஓட்டியாகவும் ஆணுக்குச்
சமமாக நீ வரவேண்டுமென
வியர்வை
சிந்தியவன். என் இனிய
பெண்ணினமே! சுயமரியாதை
இல்லாமல் உனக்கு விடுதலை
இல்லை!

பெரியாரை தவிர்த்தால்... இம்
மண்ணில் சுயமரியாதை
என்ற ஒன்றே இல்லை!

பெரியாரைப் படி! அதுதான்
நம்மினத்தின் விடுதலைக்காய்
வைக்கப் போகிற முதல் அடி!

வாய்ப்புக்கு நன்றி கூறி விடை
பெறுகிறேன்!

# சாகித்ய அகாடமி விருதை ஏற்க இன்குலாப் குடும்பத்தினர் மறுப்பு

மக்கள் கவிஞர் இன்குலாப்பின் கவிதை நூலுக்கு நடுவண் அரசு 'சாகித்ய அகாடமி' விருது வழங்க முன் வந்ததை, அவரது குடும்பத்தினர் ஏற்க மறுத்துவிட்டனர். இது குறித்து குடும்பத்தினர் தந்துள்ள விளக்கம்:

இன்குலாப் விருதுகள் பற்றிக் கூறியது:

"எனக்கு விருதுகள் வரும் என்று எதிர்பார்த்து எழுதுவதில்லை. ஆனால் எதிர்ப்பும், கண்டனமும், தாக்குதலும் வரலாம் என்பதை எதிர்பார்த்தே உள்ளேன்.''

"அவ்வப்பொழுது விசாரணைக் காக இந்த அரசாங்கம் என்னை அழைப்பதே எனக்கான பரிசுகளின் தொடக்கமாகும்.

அதற்கும் மேலே

என் பேனா அழுந்துகையில்
எழுத்தாளன் எவனுக்கும்
கிடைக்காத பரிசு
இந்திய மண்ணில்
எனக்கு நிச்சயம்.''

இவ்வாறு விசாரணைகளை வாழும் காலத்திலும் இறந்த பின்னும் நேர்கொண்ட இன்குலாபுக்கு அரசினால் அளிக்கப்படும் இவ்விருது ஓர் அங்கீகாரமாகலாம். ஆனால் இன்குலாப் அரசினால் தரப்படும் எவ்விருதையும் வாழும்காலத்திலேயே ஏற்க முடியாது என மறுத்துள்ளார்.

அரசு முகங்கள் மாறலாம். ஆனால் அவை அணிந்திருக்கும் முகமூடி ஒன்றே. அடக்குமுறையும், இனவாத மும், வர்க்கபேதமும், வன்முறையும் தலைவிரித்தாடிக் கொண்டிருக்கிறது. விமர்சிப்பவர்கள், எதிர்ப்பவர்களை யெல்லாம் படுகொலை செய்யும் இந் நேரத்தில் இவ்விருதை ஏற்றுக் கொள் வது என்பது இன்குலாப் வாழ்ந்த வாழ்க்கைக்கும், எழுதிய எழுத்துக் களுக்கும் துரோகம் இழைப்ப தாகும். இன்குலாபுக்கு அனைத்து இருட்டடிப்புகளையும் தாண்டி பரவலான மக்கள் வாசக வட்டம் உண்டு. அதுவே அவருக்கு ஒப்புகை யாகவும் அங்கீகாரமாகவும் இருக்கும். இன்குலாப் அவர்களின் விருப்பப்படி இவ்விருதை நாங்கள் ஏற்கவில்லை.

இறுதியாக இன்குலாபின் வரிகளில்

"விருதுகள் கௌவரவப்படுத்தும்
பிணமாக வாழ்ந்தால்
என் போன்றோரை '' - என்று
இன்குலாப் குடும்பத்தினரான
கமருன்னிஸா (துணைவியார்)
சா.செல்வம் (மகன்)
சா.இன்குலாப் (மகன்)
சா.அமினா பர்வின் (மகள்)

- ஆகியோர் அறிவித்துள்ளனர்.

# சங்கராபுரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்

விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரத்தில் பெரியார் நினைவு நாளை முன்னிட்டு பெரியாரின் கனவாக இருந்த அனைத்து சாதி யினரும் அர்ச்சகராக வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தி திராவிடர் விடுதலை கழகம் சார்பாக (23-12-2017) கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் க.இராமர், செ.வே.ராஜேஷ், பூ.ஆ. இளையரசன், க.மதியழகன், ந.அய்யனார் மற்றும் மக்கள் அதிகாரம் அமைப்பின் சார்பாக இராஜேந்திரன், தமிழ்ச் சங்கம் சார்பாக கவிஞர் முருகேசன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

# சமூக செயல்பாட்டாளர்கள், வழக்குரைஞர்கள் மீது அடக்குமுறை சட்டம் பாய்வதற்கு கடும் கண்டனம்



அரசு அடக்குமுறை எதிர்ப்புக் கூட்டமைப்பு சார்பில் 8.1.2018 அன்று பத்திரிகையாளர்கள் சந்திப்பு சென்னையில் நடந்தது. கூட்டமைப் பின் ஒருங்கிணைப்பாளர் பார்த்திபன் செய்தி யாளர்களிடம் கூறிய தாவது:

வீரப்பன் தேடுதல் வேட்டை எனும் பெயரில் பழங்குடி மக்களின் மீது நிகழ்த்தப்பட்ட மனித உரிமை மீறல்களையும், திட்டமிட்டு நடத்திய பரமக்குடி துப்பாக்கிச் சூடு முதல் ஆந்திராவில் செம்மரக் கடத்தல் எனக் கூறி 20 தமிழர்களை சுட்டுக் கொன்றது வரையிலான மனித உரிமை மீறல்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த குடியுரிமை பாதுகாப்பு நடுவம் மாநில ஒருங்கிணைப்பாளரும் மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞருமான முருகன், மாவோயிஸ்டுகள் என்று கைது செய்யப்பட்ட சந்திரா மற்றும் கலா ஆகியோருக்காக எந்த வழக்கு பார்த்து வந்தாரோ அதே வழக்கின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு கடந்த **2017 ஜனவரி 8** அன்று கொடுஞ்சட்டமான தேசவிரோத தடுப்புச் சட்டத்தின் (UAPA) கீழ் கைது செய்யப்பட்டு ஏறக்குறைய ஓர் ஆண்டு காலமாக திருச்சி சிறையில் அடைக்கப்பட் டுள்ளார். அவரது பிணை மனு இன்று வரையிலும் கிடப்பிலேயே போட்டுள்ளது.

நவம்பர் 3, 2017 அன்று திருநெல்வேலி பழவூர் மாறன்குளத்தைச் சார்ந்த வழக்கறிஞரும் தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத் தலைமைக் குழு உறுப்பினரும், தமிழக மக்கள் உரிமைக் கழக ஒருங்கிணைப்பாளரும் கூடங்குளம் போராட்ட வழக்குகளை நடத்தும் வழக்கறிஞர் செம்மணி என்கிற இராஜரத்தினம், எந்தவித புகாரும் இல்லாத நிலையில் தமிழக வள்ளியூர் போலீசாரால் மிகக் கொடூரமாக தாக்கப்பட்டுள்ளார்.

மண்ணுக்காகவும், மக்களின் வாழ்வாதாரத்திற் காகவும் தொடர்ந்து குரல் கொடுக்கும், ஆதரவு போராட்டங்களை முன்னெடுக்கும் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், ஜனநாயக சக்திகளின் மீதும் தொடர்ந்து கொடுஞ்சட்டங்களை சுமத்துவது அரசின் வாடிக்கையாகவே உள்ளது. அதற்கு குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைதாகி வெளி வந்திருக்கும் திருமுருகன், டைசன், இளமாறன், அருண் மற்றும் வளர்மதி ஆகியோர் சிறந்த உதாரணங்களாவர். இதன் தொடர்ச்சியாகத் தான் சம்பள உயர்வுக்காகப் போராடும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள், அவர்களைத் தொடர்ந்து போக்குவரத்துத் தொழிலாளர்கள் மீதும் மற்றும் ஜனநாயகத்திற்காகக் குரல் கொடுக்கும் அனைத்து வழக்கறிஞர்களின் மீதும் நீதித் துறையும், அரசும் கைகோர்த்து, கொடூரமான அடக்குமுறையை ஏவி வருகிறது.

மாவோயிஸ்டுகளை ஆதரிப்பது குற்றமல்ல என்று உச்சநீதிமன்றம் தமது தீர்ப்புரையில் சுட்டிக் காட்டிய பின்னரும், எத்தகைய குற்ற வழக்குகள் சுமத்தப்பட்டவர்களாக இருப்பினும், அவர் களுக்காக வழக்காடுவது என்பது வழக்கறிஞர் களின் அடிப்படை ஜனநாயக உரிமையாக உள்ள போதிலும், மாவோயிஸ்ட் என்ற பெயரில் தமிழக அரசால் வழக்கு தொடுக்கப்பட்டவர்களுக்காக, வழக்காடிய மதுரை வழக்கறிஞர் முருகன் மீது போடப்பட்டுள்ள UAPA-வை இரத்து செய்து உடனடியாக அவரை விடுதலை செய்ய வேண்டுமென அரசு அடக்குமுறை எதிர்ப்பு கூட்டமைப்பு வலியுறுத்துகிறது.

வழக்கறிஞர் செம்மணி மீது கொலைவெறித் தாக்குதல் நடத்திய வள்ளியூர் டி.எஸ்.பி. குமார், பணகுடி ஆய்வாளர் ஸ்டீபன் ஜோஸ் மற்றும் விமல்குமார், பழனி, முகமது நாசீர் ஆகிய உதவி ஆய்வாளர்கள், சாகர், செல்லதுரை, ஜோஸ் ஆகிய தனிப்படை காவலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய காவல்துறையினர் மீது கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து கைது செய்ய வேண்டுமென தமிழக அரசை இக்கூட்டமைப்பு வலியுறுத்துகிறது” என்று கூறினார்.

சந்திப்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், திருமுருகன் காந்தி (மே 17 இயக்கம்), தமிழ்நேயன் (தமிழ் தேசிய விடுதலை இயக்கம்), ஜெயநேசன் (ஜாதி ஒழிப்பு கூட்டியக்கம்), அப்துல் கரீம் (எஸ்.டி.பி.ஐ.), சென்னை மாவட்டக் கழகத் தலைவர் வேழவேந்தன், செயலாளர் இரா. உமாபதி கலந்து கொண்டனர்.

செய்தியாளர்கள் கேள்விக்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பதிலளிக்கை யில் கூறியதாவது:

தமிழ்நாட்டில் தேர்தல் கட்சிகளைவிட மக்கள் பிரச்சினைகளுக்காக மக்களைத் திரட்டி இயக்கங்களே போராடி வருகின்றன. மீதேன், ஹைடிரோ கார்பன் போன்ற மத்திய அரசின் மக்கள் விரோத திட்டங்களை தமிழ் நாட்டில் தனது பினாமி ஆட்சியின் வழியாக செயல்படுத்தி வருகிறது பா.ஜ.க. ஆட்சி. இத்திட்டங்களை எதிர்த்துப் போராடும் மக்களையும் அவர்களுக்காக வாதிடும் வழக்குரைஞர்களையும் அடக்குமுறை சட்டத்தின் கீழ் கைது செய்து மிரட்டினால் மக்கள் போராட்டத்தை ஒடுக்கி, மத்திய பா.ஜ.க. அரசின் திட்டங்களை நிறைவேற்றிடலாம் என திட்டம் போட்டு செயல்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார்.

# கோபி, கோவையில் பெரியார் நினைவு நாள்

பெரியார் நினைவுநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கோபி பெரியார் திடலில் உள்ள பெரியார் சிலைக்கு அறிவியல் மன்ற தோழர் கற்பகம் மற்றும் மணிமொழி ஆகியோர் மாலை அணிவித்தனர். நிகழ்வில் மாநில வெளியீட்டு செயலர் இராம.இளங்கோவன்,நிவாஸ், அருளானந்தம், சுப்பிரமணி, ரகுநாதன் மற்றும் அறிவியல் மன்ற தோழர்கள் ஆசைத்தம்பி, விசயசங்கர், மாணவர் கழக தோழர் அறிவுமதி, பெரியார் பிஞ்சு அறிவுக்கனல், ஆதித்தமிழர் பேரவை மாவட்ட பொறுப்பாளர்கள் யுவராஜ், ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோவை :** கோவை நகரில் திராவிடர் விடுதலைக் கழகம் பெரியார் 44ஆவது நினைவுநாளை மிகச்சிறப்பாக நடத்தியது. மாவட்ட தலைவர் நேருதாசு தலைமையில் சிலைக்கு மாலையிட்டு, பெரியார் பெற்றுத் தந்த உரிமைகளை நன்றி உணர்வுடன் முழக்கமிட்டனர். மாணவர் கழகப் பொறுப்பாளர் வைதீஸ்வரி உறுதிமொழியை முன்மொழிய அனைவரும் உறுதிமொழி ஏற்றனர். விடுதலை சிறுத்தைகள் கட்சித் தோழர்களும் பங்கேற்றனர்.

# சலசலப்புகளை முறியடித்து எழுச்சியுடன் நடந்த ஈரோடு காஞ்சிக் கோயில் தெருமுனைக் கூட்டம்

ஈரோடு தெற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 07.01.2018 ஞாயிறு மாலை 6:30 மணியளவில் காஞ்சிக்கோயில் நான்குமுனை சந்திப்பில் யாழ் எழிலன் தலைமையில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. சவுந்தர் தொடக்கவுரையாற்ற, அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அறிவியல் மன்றத்தைச் சார்ந்த வீரா கார்த்தி பேசத் துவங்கிய பத்து நிமிடங்களில், அங்கு வந்த பதினைந்திற்கும் மேற்பட்ட கொங்கு அமைப்பைச் சார்ந்த கும்பல் கலவரம் செய்து கூட்டத்தை முடக்கும் நோக்கில் பேசாதே பேசாதே இந்துவைப் பற்றி பேசாதே என்று கூச்சலிட்டனர். அங்கு வந்த காவல்துறை அவர்களை அப்புறப்படுத்தியது. தொடர்ந்து வீரா கார்த்தி நீட் தேர்வின் ஆபத்து குறித்தும், தமிழ்நாடு தேர்வாணையம் குறித்தும் மாட்டுக்கறி தடை பற்றியும் உரையாற்றினார். இறுதியாக தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி மூடநம்பிக்கை குறித்து பேசினார் . பெரியார் இயக்கம் இது போன்ற எண்ணற்றத் தடைகளை சந்தித்த இயக்கம் இந்த சலசலப்பிற்கெல்லாம் அஞ்சாது, இன்னும் மூன்று மாதங்கள் கழித்து காஞ்சிக் கோயிலில் மாபெரும் பொதுக் கூட்டம் நடத்தப்படும் என்று பொதுமக்களின் பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார். இரவு 8மணிக்கு கூட்டம் நிறைவுற்றது. காஞ்சிக்கோயிலின் அருகாமையில் உள்ள ஊர்களைச் சார்ந்தோர் இது போன்ற கூட்டங்கள் தங்கள் ஊர்களிலும் நடத்தவேண்டுமெனக் கேட்டுக்கொண்டனர்.


# சேலம் செயலவையில் ‘மதிப்புமிகு வணக்கம்’



29.12.2017 அன்று சேலத்தில் நடந்த திவிக செயலவை கூட்டத்தில் தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளர் சிவகாமி, தன் உரையினூடே, இனி தோழர்கள் அனைவரும் தலைவர் கொளத்தூர் மணியை சந்திக்கும் போது குறைந்தது ரூ.100/- என நன்கொடை கொடுத்து வணக்கம் வைக்க வேண்டும் என்றும் அது மதிப்புமிகு வணக்கம் என்றும் வேண்டிக்கொண்டார்.

அதன் பின் பேச வந்த சேலம் மாவட்ட பொறுப்பாளர் சூரியகுமார், ரூ.500 கொடுத்து நானே இந்த மதிப்புமிகு வணக்கத்தினை தெரிவித்து ஆரம்பித்து வைக்கிறேன் என்றார். பின் திருப்பூர் மாவட்ட செயலாளர் நீதிராசன் ரூ.100 கொடுத்தார்.

# தலைமைக் கழகத்தில் “நிமிர்வோம்” வாசகர் வட்டம்



திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாத இதழான “நிமிர்வோம்” இதழ் குறித்து வாசகர் வட்டம் (31.12.2017) மாலை 6 மணிக்கு தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார் தலைமையில் திவிக தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. வாசகர் வட்டத்தினை வே.இராமசாமி ஒருங்கிணைத்தார். பிப்ரவரி மற்றும் மார்ச் 2017 இதழ்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. தோழர்கள் ஜெயபிரகாஷ், எட்வின் பிரபாகரன், பிரகாஷ், மதன்குமார், வே.இராமசாமி இதழில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் குறித்து தங்களது கருத்துகளை எடுத்துரைத்தனர். சிறப்புரையாற்ற - மார்க்சிய - பெரியாரிய ஆய்வாளர் க.காமராசன் “வால்காவிலிருந்து கங்கை வரை” என்ற நூல் குறித்து விரிவாகப் பேசினார். தன் ஆழமான கருத்துகளையும், நூலின் சிறப்புகளை குறித்து தோழர்களிடம் தெளிவான விளக்கத்தை கொடுத்தார். மா.தேன்ராஜ் நன்றி கூறினார்.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பேஷ்வா பார்ப்பனர்களை எதிர்த்து திரண்டனர் தலித் - ஒடுக்கப்பட்ட மக்கள்

மஹாராஷ்டிரா மாநிலத்தின் புனே வட்டாரத்தில் பீமா ஆற்றின் கரையில் அமைந்துள்ள கோரிகாவுன் கிராமத்தில் 1818 ஜனவரி 1ல் நடந்த, மூன்றாம் ஆங்கிலோ மராத்தா போரின் இறுதிச் சண்டையில், அன்றைய பேஷ்வா பார்ப்பனர் படையை முறியடித்தனர். தலித் பிரிவைச் சார்ந்த மகர் வீரர்கள், கிழக்கிந்திய கம்பெனி படையில் இணைந்து போரிட்டனர். அந்த வெற்றியை ஆண்டுதோறும் தலித் மக்கள் நினைவுகூர்ந்து கொண்டாடி வருகிறார்கள். கிழக்கிந்திய கம்பெனி பிரிட்டனிலிருந்து வந்த வணிக நிறுவனம் பிற்காலத்தில்தான் பிரிட்டிஷ் அரசே, கம்பெனியின் கீழிருந்த பகுதிகளைத் தன் வசம் எடுத்துக் கொண்டது.

பேஷ்வா ஆட்சி என்பது பார்ப்பன சமூகத்தைச் சேர்ந்த மன்னராட்சி. அவர்களது படைப் பிரிவுகளில் ஆங்காங்கே மஹர் (தலித்) சமூகத்தினரும் இருந்திருக்கிறார்கள். பேஷ்வா மன்னர் முதலாம் பாஜி ராவ் 1740ல் மரணமடைந்ததைத் தொடர்ந்து, நாட்டிற்கு உள்ளேயும் படைப்பிரிவுகளிலும் மஹர் மக்கள் பல்வேறு அவமதிப்புகளைக் கூடுதலாகச் சந்திக்கத் தொடங்கினார்கள்.கொடூரமான ஜாதிய ஒடுக்குமுறைகள் தடைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. கிழக்கிந்திய கம்பெனி நிர்வாகத்தால் தோற்கடிக்கப்பட்டிருந்த பேஷ்வா பார்ப்பன மன்னர்கள் தங்களுக்கிடையே கூட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு, ஆட்சியைக் கைப்பற்றப் போர்களில் ஈடுபட்டு வந்தார்கள். கம்பெனி நிர்வாகம் அவர்களுக்கு கான்ஃபெடரசி (சட்டவிரோத நோக்கங்களுக்கான கூட்டமைப்பு) என்று பெயரிட்டிருந்தது. அவற்றில் ஒன்றுதான் பேஷ்வா கான்ஃபெடரசி. அதன் தலைமையில் இருந்தவர் இரண்டாம் பாஜி ராவ்.கம்பெனி படைகளை முறியடித்து விரட்டும் போரில்தாங்களும் இணைய விரும்பி, பேஷ்வா படையில் தங்களைச் சேர்த்துக் கொள்ளக் கோரினார்கள் மஹர் இளைஞர்கள். ஆனால், சாதிய ஆதிக்கப் புத்தியோடும் மமதையோடும் எங்களோடு சேர்ந்து போரிட உங்களுக்கு தகுதியில்லை என்று கூறி, மகர் வீரர்கள் நின்ற இடம் தீட்டாகிவிட்டது என்று அவமதித்து தீட்டுக் கழிப்பு சடங்குகளை செய்தான் பேஷ்வா பார்ப்பன மன்னன். மகர்கள் அவமதிக்கப்பட்டுத் திருப்பியனுப்பப் பட்டார்கள். அதனால் ஏற்பட்ட மனக் கொந்தளிப்போடுதான் அவர்கள் கம்பெனிப் படையை நாடினார்கள். நிர்வாகம் உடனே அவர்களைப் படையில் சேர்த்துக் கொண்டது. இரண்டாம் பாஜி ராவின் பேஷ்வா பார்ப்பனப் படையில் அப்போது சுமார் 28,000 பேர் இருந்தார்கள். 12 அதிகாரிகளுடன் இருந்த கம்பெனியின் படையிலோ, காலாட்படையினர் 834பேர்தான்.

அவர்களில் கிட்டத்தட்ட 500 பேர் மஹர்கள்.அந்தச் சிறிய படைதான் பேஷ்வா பார்ப்பனரின் பெரும்படையை வீழ்த்தி, கோரிகான் கிராமத்தை மீட்டது. 1927 ஜனவரி 1இல் டாக்டர் அம்பேத்கர் கோரிகாவுனுக்குச் சென்று, பிரிட்டிஷ் கம்பெனி ஆட்சியில் அங்கு நிறுவப்பட்டிருந்த வெற்றித்தூண் முன்பாக நின்று, மஹர் வீரர்களுக்கு அஞ்சலிசெலுத்திய பிறகுதான், அதுவரையில் அடிமைப்பட்டவர்களாக மட்டுமே காணப்பட்டவர்களின் மகத்தான வீரமும் தியாகமும் வெளி உலகத்திற்குத் தெரிய வந்தது. 2005இல் பீமா கோரிகாவுன் ரன்ஸ்தம்ப் சேவா சங் (பீகேஆர்எஸ்எஸ்) என்ற அமைப்பு, இதை நினைவுகூர்ந்து பரப்பிடும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இலட்சக்கணக்கானோர் கோரிகாவுனில் கூடி அஞ்சலி செலுத்திவிட்டு, தலித் சுயமரியாதையை நிலைநாட்ட உறுதியேற்றுத் திரும்புகிறார்கள். இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற தலித்வீரர்கள், அதிகாரிகள் ஆகியோரும் அஞ்சலி நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்கள்.இருநூறாவது ஆண்டு என்பதையொட்டி இவ்வாண்டுஎல்கார் பரிஷத் (போர்க்குரல் விழா) கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதை சில பார்ப்பன அமைப்புகள் உள்ளிட்ட இந்துத்துவா கும்பல்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அஞ்சலி செலுத்த வந்த மகர்களை தாக்கத் தொடங்கினர்.

பேஷ்வா பார்ப்பனர் இந்துத்துவா சக்திகளை எதிர்த்து மகாராஷ்டிரம் முழுதும் இலட்சக்கணக்கான மகர், பிற்படுத்தப்பட்டோர் இணைந்து முழு அடைப்புப் போராட்டம் நடத்தி, மகாராஷ்டிய ஆட்சியை நிலைகுலையச் செய்துள்ளனர். மகாராஷ்டிரா முதலமைச்சர் ஒரு பார்ப்பனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அறமற்ற பா.ச.க. பேசுவது ஆன்மீகமா?

கோவிலுக்குள் தமிழ் ஒலிக்க முயற்சி எடுக்காத பாரதிய சனதா கட்சி, ஆழ்வார்களையும், நாயன்மார்களையும் பற்றி பேசுவது அபத்தம். 28.12.2017 அன்று புதியதலைமுறை தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்ட பாரதிய சனதா கட்சியைச் சேர்ந்த கே.டி.ராகவன் “தமிழகம் பெரியார் மண் அல்ல; ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் நிறைந்த மண்” என்றார்.

வேதங்களையும், மநு நீதியையும் ஏற்றுக்கொண்டு மதவாத ஆட்சி புரியும் பாரதிய சனதா கட்சியைச் சேர்ந்த ராகவன், தமிழர்களிடம் ஓட்டுவாங்குவதற்காக ஆழ்வார் களையும், நாயன்மார்களையும் இழுத்துப்போட்டுக் கொள்வது வேடிக்கையாக உள்ளது. சிதம்பரம் நடராசர் கோவிலில் ஐயா ஆறுமுகசாமி திருவாசகம் ஓதுவதற்கு அங்குள்ள பார்ப்பனர்கள் எதிர்த்தபோது அதை எதிர்க்க முடியாத பா.ச.க. இப்போது ஆழ்வார் களையும், நாயன்மார்களையும் இழுப்பது ஏன் என்று தெரியாதவர்களா தமிழர்கள்? உங்களின் ஓட்டரசியலுக்கு நாயன்மார்கள் தேவைப்படுகிறார்கள், ஆலயங்களுக்குள் திருவாசகம் தேவையில்லை என்றால் உங்களின் எண்ணத்தை தமிழக மக்கள் நன்றாக புரிந்து கொள்வார்கள். தமிழகம் என்றுமே "பெரியார் மண்தான்". கடவுள் நம்பிக்கை கொணட பலர் பெரியாரின் ’சமூக நீதியை’ ஆதரித்துள்ளார்கள் என்பதுதான் தமிழக வரலாறு. சமூக நீதியை எதிர்க்கக்கூடிய பார்ப்பனிய மதவாதச் சிந்தனை கொண்ட எந்த கட்சியையும் தமிழகம் எதிர்க்கும்.

பெரியார் மண் என்றால் "சமூகநீதியைப் போற்றும் மண்" என்பதுதான் உண்மையான பொருள். கடவுள் நம்பிக்கையோடு கோவிலுக்குப் போகின்றவர் களெல்லாம் மதவாதிகள், மநுவாதிகள் அல்ல. சமய நம்பிக்கைக்குப் பதிலாக மாற்று மதத்தின் மீது வெறுப்பை வீசி மதவாத அரசியல் செய்யும் அரசியலை நன்கு தெரிந்து கொண்டவர்கள்தான் தமிழ்நாட்டு சமய நம்பிக்கைக் கொண்டவர்கள்.

தமிழ்நாடு என்பது சித்தர்களையும், சித்தாந்திகளையும் போற்றிய மண். உங்களைப் போன்ற வேதாந்த மநுவாதிகளை என்றும் அனுமதிக்க மாட்டார்கள். மநு நீதிக்கு எதிரானது எங்களின் திருக்குறள். உங்களின் மத அடையாளங்களையும், மதவாதச் சிந்தனைகளையும் துடைத்து எறிந்துவிடுகிறது தமிழ் கூறு நல்லுலகம் உலகுக்கு வழங்கிய கொடையான திருக்குறள்.

மதவாதப் போக்கை என்றுமே எதிர்த்து நின்றதுதான் தமிழ்ச் சமய வரலாறு. "மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்" என்கிறார் வள்ளலார். வேத மரபை எதிர்ப்பதுதான் தமிழ் மரபு. தமிழ் மரபில் வந்த நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் நீங்கள் கூறுவதனால் தமிழ்ச் சமயவாதிகள் உங்களைப் போன்ற மதவாதிகளை ஆதரிப்பார்கள் என்று கனவு காணாதீர்கள். திருமூலர் தொடங்கி வள்ளலார் வரை அனைவருமே பார்ப்பன எதிர்ப்பை, வேத மறுப்பை கைகொண்டவர்களே.

பெரியார் கடவுள் நம்பிக்கை அற்றவராக இருக்கலாம் ஆனால் அனைவரும் ஆலயத்திற்குள் செல்லவேண்டும் என்று கூறியவர். அதற்காக போராடியவர். நீங்கள் கடவுள் நம்பிக்கையாளர் எனக் கூறிக்கொண்டு சாதிப்படி நிலைகளோடுதான் மனிதர்களை கோயில்களுக்குள் அனுமதிக்கவேண்டும், சாதிப்படிநிலைதான் தர்மம் என்பவர்கள். கடவுள் நம்பிக்கையற்ற பெரியார்தான் இந்து சமயத்தைச் சேர்நத தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் கல்வி வேலைவாய்ப்பைப் பெற வேண்டும் என்று கூறியவர். கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள் எனக் கூறிக்கொள்ளும் நீங்கள் இந்துமதத்தில் உள்ள சக மக்களின் கல்வி வேலைவாய்பையே பறிக்க நினைத்து இடஒதுக்கீட்டுக்கு எதிராக பேசியும் எழுதியும் வருபவர்கள். நீட் போன்ற தேர்வுகளை திணித்து தமிழக இந்து சமய நம்பிக்கை கொண்ட மாணவர்களை மருத்துவம் படிக்க முடியாதபடிச் செய்யும் மநுவாதிகள்.

இந்து சமயக் கோவில்களைக் கட்டியவர்களும் நாங்களே, பாதுகாப்பதும் நாங்களே, மன்னர்கள் காலத்தில் உருவ வழிவாட்டில் நம்பிக்கையற்ற சமற்கிருத வேதத்தை ஏற்றுக்கொண்ட நீங்கள் வேதத்திற்கு எதிரான ஆகம விதிமுறைகள்படி கட்டப்பட்டுள்ள தமிழக கோவில்களுக்குள் நுழைந்து கொண்டு சிவாச்சாரியார்களையும், ஓதுவார்களையும் வஞ்சித்து வருவதுபோல் இப்போது பெரியாரைப் படித்து வளரும் தமிழர்களை வஞ்சிக்க நினைப்பது இனியும் எடுபடாது. திருக்குறளே எங்கள் நெறி. வேதங்கள் அல்ல. கோவிலுக்குச் செல்லும் மக்களையெல்லாம் கட்சிக்குள் இழுத்துவிடலாம் என்ற பிற்போக்கான அரசியல் பிழைப்புக்கு அறமே கூற்றாகும்.

**நா.வெங்கடேசன், ஆசிரியர், ‘மெய்ச்சுடர்’**

# ‘திராவிடத்தால் எழுந்தோம்’ குமரியில் விளக்கக்கூட்டம்

குமரி மாவட்டத் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக 09-12-2017, சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு குலசேகரம் அரச மூடு சந்திப்பில் நடைப் பெற்ற “திராவிடத்தால் எழுந்தோம்” விளக்கப் பொதுக்கூட்டத்திற்கு மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் வே.சதா, குமரி மாவட்ட பெரியார் தொழிலாளர் கழகத் தலைவர் நீதி அரசர் ஆகியோர் தலைமை தாங்கினர்.

கழகத் தோழர்கள் தமிழ் அரசன், தமிழ் மதி, மஞ்சு குமார், ஜான் மதி, சூசையப்பா, இரமேஷ் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். விஸ்ணு வரவேற் புரையாற்றினார். விடுதலைச் சிறுத்தைகள் கட்சி பொறுப்பாளர்கள்: கேரளாபுரம் முருகன், மேசியா, சத்திய தாஸ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அறிவுக்களஞ்சியம் நிறுவனர் பேபி செபக்குமார், ‘மந்திரமல்ல! தந்திரமே!’ எனும் அறிவியல் நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார்.

கழகப் பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

1913-ல்,கோயிலுக்கு நன்கொடையாக ரூ10,000 கொடுக்குமளவிற்கு பணக்காரரா யிருந்தாலும் சர். பிட்டி. தியாகராயர் அவமானப்படுத்தப்பட்டதும், எவ்வளவுப் படித்திருந்தாலும் பொருளாதார மேதையானாலும் இந்தியா-பாகிஸ்தான் கணக்கை சரி செய்தவருமான சர். ஆர்.கே. சண்முகம் போன்றவர்களை பார்ப்பனர்கள் ஏளனம் செய்தார்கள். அந்த நிலையிலிருந்து இந்த சமூக மக்கள் மானமும் அறிவும் பெற திராவிடர் இயக்கம் ஆற்றியப் பணியினை பட்டியலிட்டு, தற்போது கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இழைக்கப்படும் அநீதிகள் குறித்து விரிவாக உரை யாற்றினார். நிறைவாக அனீஸ் நன்றியுரையுடன் முடிவுற்றது.

நிகழ்ச்சியில் நெல்லை மாவட்டத் தலைவர் பால் வண்ணன், மார்க்சிய லாளர் போஸ், வைகுண்ட ராமன், இராஜேஸ் குமார், பொன். இராசேந்திரன், அருள் ராஜ், ஆர்மல், சிபு ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

# குமரி மாவட்டம் - பள்ளியாடி - தமிழ் மதி இல்லவிழா



குமரி மாவட்ட கழகச் செயலாளர் தமிழ் மதி-பிரேம லதா இணையர் மகன் தமிழ் நவிலன் முதல் பிறந்த நாள் விழா 10.12.2017, ஞாயிற்றுக் கிழமை மதியம் 12.00 மணிக்கு பள்ளியாடி இருதய அரங்கில் கொண்டாடப்பட்டது. விழாவில் தமிழ் மதியின் உறவினர்கள், கழகத் தோழர்கள், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தோழர்கள், சமூக ஆர்வலர்கள் பெருவாரியாகக் கலந்துக் கொண்டனர். தமிழ் மதி பிறந்த நாள் ஏன் கொண்டாடுகிறோம் என்றும், தமிழ்ப் பெயர் ஏன் சூட்டினோம் என்றும் கூறி வரவேற்புரையாற்றினார். அறிவுக்களஞ்சியம் நிறுவனர் பேபி செபக்குமார் மந்திரமல்ல!தந்திரமே! எனும் அறிவியல் நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார். பின்பு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ் நவிலன் பிறந்த நாளில் பெற்றோருக்கு அறிவுரையாக சோதிடம், நல்ல நேரம், கெட்ட நேரம் மூடநம்பிக்கைகள் குறித்தும், பிள்ளைகளை சமூகத்துடன் இணைந்து வாழக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் கூறி தமிழ் நவிலன் சமூகச் சிந்தனையுடன் வாழ, வளர, வெல்ல வேண்டுமென வாழ்த்துரையாற்றினார். நிகழ்வில் தமிழ் நவிலன் கேக் வெட்டி உறவுகளுக்கு ஊட்ட விழா இனிதே முடிவுற்றது. பிறந்த நாளை முன்னிட்டு அரசு நூலகத்துக்கு ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ 5 ஆண்டுச் சந்தாவாக ரூ.1000 வழங்கினார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 11th January 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN